ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2069/20 - 2018 මැයි මස 02 වැනි බදාදා - 2018.05.02

*2069/20 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு மே மாதம் 02 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## *மாகாண சபை அறிவித்தல்கள்*

**மேல் மாகாண மாகாண சபை நடவடிக்கை ஒழுங்கு விதிகளின் 40(1) ஆம் பிரிவின் பிரகாரம் செய்யப்படும் அறிவித்தல்**

மேல் மாகாண கழிவுப் பொருள் முகாமைத்துவ விசேட ஏற்பாடுகள் நியதிச்சட்டம் எனும் பெயருடைய கீழுள்ள அட்டவணையில் விபரிக்கப்படும் நியதிச்சட்ட வரைபிற்கான மேல் மாகாண அமைச்சரவையின் அங்கீகாரம் 2017.10.04 ஆந் தேதியிட்ட அமைச்சரவைத் தீர்மான இல. வீஜ/94/09/2017-02(i) இன் மூலம் கிடைக்கப் பெற்றுள்ளதெனவும் அது மேல் மாகாண சபையின் அங்கீகாரத்திற்காக என்னால் முன்மொழியப்படவுள்ள தெனவும் பொதுமக்களைத் தெரியப்படுத்துவதற்காக இத்தால் அறிவிக்கின்றேன்.

**இசுர தேவப்பிரிய,**
மேல் மாகாண முதலமைச்சர் மற்றும்
பொருளாதார ஊக்குவிப்பு, மின்சக்தி
மற்றும் எரிசக்தி, சூழல் நடவடிக்கை,
நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு
மற்றும் சுற்றுலா நடவடிக்கை அமைச்சர்.

முதலமைச்சர் அலுவலகம்,
சிராவஸ்தி மந்திரய,
கொழும்பு - 07,

*2018, ஏப்பிறல் 26.*

1A - PG4025 - 12 (2018/05)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk.எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

### மேல் மாகாணத்தின் கழிவுப் பொருள் முகாமைத்துவ விஷேட ஏற்பாட்டு நியதிச் சட்டம்

*மேல் மாகாணத்தினுள் கழிவுப் பொருள் முகாமைத்துவத்திற்கு தொடர்புடைய மேல் மாகாணத்தின் 2007 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க மேல் மாகாண கழிவுப் பொருள் முகாமைத்துவ அதிகார சபை நியதிச் சட்டத்தினால் நிறுவப்பட்ட மேல் மாகாண கழிவுப் பொருள் முகாமைத்துவ அதிகார சபை மூலம் நடைமுறைப்படுத்துகின்ற திறமுறைகள் உள்ளூராட்சி நிறுவன மட்டத்தில் அதிகாரமளித்தல் தொடர்பாகவும் உள்ளூராட்சி நிறுவனம் மூலம் ஒன்று சேர்க்க வேண்டியுள்ள வீதிகளில் இருக்கின்ற கழிவுப் பொருள், வீடுகளிலுள்ள கழிவுப் பொருள் முறையாக மற்றும் பொருத்தமான செயன்முறையின் கீழ் அகற்றுவதற்கு ஏற்பாடு தயாரித்தல் தொடர்பாக உள்ளூராட்சி நிறுவனங்களின் மூலம் ஒன்று சேர்க்க வேண்டிய வீதிகளிலுள்ள கழிவுப் பொருள் வீடுகளில் ஒன்று சேர்கின்ற கழிவுப் பொருள் தவிர்ந்த வேறு கழிவுப்பொருள் உள்ளூராட்சி நிறுவனங்கள் மூலம் பொறுப்பேற்றல் தொடர்பாக விலையொன்றை தீர்மானித்தல் மற்றும் தரத்தை தீர்மானிப்பது தொடர்பாக ஏற்பாடு தயாரிப்பதற்கு மேல் மாகாணத்தினுள் கழிவுப்பொருள் முகாமைத்துவ அதிகார சபை மூலம் செயற்படுத்தப்படுகின்ற கழிவுப் பொருள் முகாமைத்துவ திறமுறைகள் ஒழுங்குபடுத்துவதற்காக கட்டணம் தீர்மானிப்பது தொடர்பாக ஏற்பாடு தயாரித்தலுக்காக இயற்றப்படும் நியதிச்சட்டமாகும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மேல் மாகாணத்தின் மாகாண சபை மூலம் இவ்வாறு இயற்றப் படுகின்றது.*

*சுருக்கப்பெயர் மற்றும் செயற்படும் திகதி*

1. இந்த நியதிச்சட்டம் மேல் மாகாணத்தின் கழிவுப்பொருள் முகாமைத்துவ விஷேட ஏற்பாடு நியதிச் சட்டம் என்பதாக அறிமுகப்படுத்தப்படுவதோடு ஆளுநர் அனுமதி அளித்த திகதியிலிருந்து செயற்படும்.

2. (1) மேல் மாகாணத்தின் உள்ளூராட்சி நிறுவனம் மூலம் எந்தவொரு எழுத்துமூல சட்டத்தின் கீழ் ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் அகற்றுதல் தொடர்பாக கழிவுப் பொருள் பெற்றுக்கொள்ளுதல், அவ்வாறு அகற்றுதல் தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கழிவுப்பொருள் தொந்தரவு ஏற்படாத முறையில் அகற்றுதல் தொடர்பாக தேவையான சகல நடவடிக்கை எடுத்தல் மற்றும் அதற்கு உரிய எழுத்துமூல சட்டத்தின் கீழ் ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் செயற்படுத்தி முற்பாதுகாப்பு ஏற்பாடு ஒழுங்குபடுத்துதல் உள்ளூராட்சி நிறுவனத்தின் பொறுப்பாகும்.

(2) உள்ளூராட்சி நிறுவனத்தின் மூலம் வீதிகளில் ஒன்று சேர்கின்ற கழிவுப்பொருள் மற்றும் வீடுகளில் ஒன்று சேர்கின்ற கழிவுப் பொருள்களற்ற வேறு கழிவுப்பொருள் அகற்றுதல் தொடர்பாக பொறுப்பேற்கும் போது அறவிட வேண்டிய கட்டணம், தனிப்பட்ட குப்பை முகாமைத்துவ செயற்திட்டம் நடாத்திச் செல்லுதல் தொடர்பாக மற்றும் வர்த்தக மற்றும் வியாபார நோக்கமாகக் கொண்டு செயற்படுவதன் மூலம் பிறப்பிக்கப்படும் கழிவுப் பொருள் தொடர்பாக அறவிட வேண்டிய கட்டணம் இந் நியதிச்சட்டத்தின் கீழ் இயற்றப்படும் சட்டவிதி மூலம் தீர்மானிக்கப்படும் முறைக்கு அமைய வேண்டும்.

*கழிவுப்பொருள் அகற்றுவது குற்றம் என்பது*

3. (1) வேறு எந்தவொரு எழுத்துமூல சட்டத்தில் எது குறிப்பிடப்பட்ட போதிலும் இந்த நியதிச் சட்டம் அல்லது எந்தவொரு எழுத்து மூலச் சட்டத்தின் கீழ் உள்ளூராட்சி நிறுவனமொன்று செயற்படுத்துகின்ற கழிவுப்பொருள் முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டத்திற்கு அல்லது முற்பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு இணக்கப்பாடு இல்லாத வகையில் எந்தவொரு நபர் மூலமும் கழிவுப்பொருள் ஓர் இடத்திலிருந்து மற்றுமொரு இடத்திற்கு கையில், துவிச்சக்கர வண்டியில், முச்சக்கர வண்டியில் கரத்தையில் அல்லது மிருகத்தின் மூலம் கொண்டு செல்லுதல், அவ்வாறு கொண்டு செல்கின்ற கழிவுப்பொருள் வீதியில் எந்தவொரு அல்லது பொது இடத்தில் வைத்து செல்லுதல், அகற்றிச் செல்லுதல், அல்லது வீதிக்கு, பொது இடத்திற்கு அவ்வாறு அகற்றும் முகமாக ஈடுபடுதல் பிழையாவதோடு அந்தப் பிழை தொடர்பாக மேல் மாகாண கழிவுப்பொருள் முகாமைத்துவ அதிகார சபையின் பணிப்பாளர் மூலம் நிலையான அதிகாரம் ஒப்படைக்கப்படுகின்ற உள்ளூராட்சி நிறுவனத்தின் உத்தியோகத்தர் அதிகார சபையின் உத்தியோகத்தர் அல்லது பொலிஸ் உத்தியோகத்தர் மூலம் முறைப்பாடு செய்யும் போது நீதிமன்ற அதிகாரமுள்ள நீதவான் நீதிமன்றம் மூலம் குற்றவாளியாக்கப்படும் போது ரூபா இருபத்தைந்தாயிரத்திற்கு குறையாமல் அல்லது ரூபா ஐம்பதாயிரத்திற்கு மேற்படாத தண்டனைக்கு அல்லது மூன்று மாதங்களுக்கு குறையாத ஆறு மாதங்களுக்குக் கூடாத சிறைத் தண்டனைக்கு அல்லது அந்த இரண்டு முறைகளில் தண்டனைக்கு உட்பட வேண்டும்.

(2) வேறு எந்தவொரு எழுத்துமூல சட்டத்தில் எது குறிப்பிடப்பட்ட போதும் இந்த நியதிச்சட்டம் அல்லது எந்தவொரு எழுத்துமூல சட்டத்தின் கீழ் உள்ளூராட்சி நிறுவனமொன்று செயற்படுத்துகின்ற கழிவுப்பொருள் முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டத்திற்கு அல்லது முற்பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு பொருத்தமற்ற விதத்தில் எந்தவொரு நபர் மூலம் கழிவுப் பொருள் ஓர் இடத்திலிருந்து வேறொரு இடத்திற்கு மோட்டார் வாகனத்தில் அல்லது படகில் கொண்டு செல்லுதல், வாகனத்தில் கொண்டு செல்லுதல் அல்லது அந்த முறையிலான செயன் முறையின் கீழ் வீதிக்கு அல்லது பொது இடத்தில் வைத்துச் செல்லுதல், அகற்றுதல் அல்லது பொது இடத்தில் அல்லது தனியார் இடத்தில் ஒன்று சேர்த்தல் இந்த நியதிச் சட்டத்தின் கீழ் குற்றமாவதோடு அந்த குற்றம்

தொடர்பாக மேல் மாகாண கழிவுப்பொருள் முகாமைத்துவ அதிகார சபை மூலம் நிச்சயிக்கப்பட்ட அதிகாரத்தைப் பெற்றுக் கொடுக்கின்ற உள்ளூராட்சி நிறுவனத்தின் உத்தியோகத்தர், அதிகார சபையின் உத்தியோகத்தர் அல்லது பொலிஸ் உத்தியோகத்தர் மூலம் முறைப்பாடு செய்யும் போது நீதிமன்ற அதிகாரமுள்ள நீதவான் நீதிமன்றம் மூலம் அந்தக் குற்றத்திற்கு குற்றவாளியாக்கப்படும் போது ஐம்பதாயிரம் ரூபாவுக்கு குறையாமல் அல்லது ஒரு இலட்சம் ரூபாவுக்கு மேற்படாத தண்டத்திற்கு அல்லது மூன்று மாதங்களுக்கு குறையாமல் ஒரு வருடத்திற்கு மேற்படாத சிறைத் தண்டனைக்கு அல்லது அந்த இரண்டு முறைகளில் தண்டனைக்கு உட்பட வேண்டும்.

(3) எந்தவொரு நபரும் இந்தப் பிரிவின் கீழ் உடனே மேற்கொள்ளப்படும் குற்றம் தொடர்பாக குற்றவாளியாகச் செய்யப்பட்ட சந்தர்ப்பத்தில் அந்த குற்றம் செய்யும் போது ஈடுபடுத்தியிருக்கும் அரசாங்க சொத்துக்கள் அல்லாத சகல கருவிகள், வாகனம் மற்றும் உபகரணம் அந்த குற்றம் தொடர்பாக நிச்சயிக்கப்பட்டதான தண்டனை யொன்றுக்கு மேலதிகமாக குற்றவாளியென உள்ளாக்கப்பட்ட நீதவானின் கட்டளையின் மூலம் அரச உடமையாக்கப்படல் வேண்டும்.

அவ்வாறாயினும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அந்த குற்றம் செய்யும் போது ஈடுபடுத்திய கருவிகள், வாகனம், உபகரணங்களின் உரியவர் மூன்றாவது தரப்பினராக இருக்கும் போது, குற்றம் செய்யும் போது சமயோசிதப்படி அந்த கருவிகள், வாகனம், உபகரணம் உபயோகித்தல் தொடர்பாக சகல முற்பாதுகாப்பு செயன்முறை தன்னால் ஏற்படுத்திக்கொண்டபடி அல்லது தனது அனுமதியின்றி செய்யப்பட்டுள்ளதோடு நீதிமன்றம் திருப்திக்கு உட்படும் வகையில் அந்த உரிமையாளர் மூலம் உறுதிப்படுத்தப்பட்டால் அரச உடமையாக்கல் செய்யும் கட்டளையொன்று செய்யாமலிருக்க வேண்டும்.

(4) மேல் மாகாண கழிவுப்பொருள் முகாமைத்துவ அதிகார சபையின் பணிப்பாளர் மூலம் அல்லது அவர் மூலம் அதிகாரத்தை ஒப்படைக்கின்ற உள்ளூராட்சி நிறுவனத்தின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் மூலம் பெற்றுக்கொண்ட உத்தரவுச்சீட்டின் கீழ் அல்லது உள்ளூராட்சி நிறுவனமொன்று அல்லது அது தொடர்பாக கழிவுப்பொருள் அகற்றும் செயல்களில் ஈடுபட்டிருக்கின்ற எந்தவொரு நபரொருவர் தொடர்பாக இந்தப் பிரிவின் ஏற்பாடு பொருத்தமற்றதாகும்.

(5) இந்தப் பிரிவின் கீழ் அறவிடப்படும் தண்டப்பணம் சமயோசிதப்படி கழிவுப்பொருள் முகாமைத்துவ அதிகார சபையின் அல்லது உரிய உள்ளூராட்சி நிறுவனத்தின் நிதியத்திற்கு வைப்புச் செய்ய வேண்டும்.

*அதிகார சபை மூலம் திறமுறைகளைத் தீர்மானித்தல்*

4. (1) வேறு எந்தவொரு எழுத்துமூல சட்டத்தில் எது குறிப்பிடப்பட்டாலும் மேல் மாகாணத்தினுள் கழிவுப் பொருள் முகாமைத்துவ திறமுறைகள் உள்ளூராட்சி நிறுவனம் மூலம் செயற்படுத்துதல் மற்றும் அதற்கு தேவையான வசதிகள் அதிகாரசபை தீர்மானிக்கின்றபடி உள்ளூராட்சி சபைக்கு பெற்றுக்கொடுத்தல் மேல் மாகாண கழிவுப்பொருள் முகாமைத்துவ அதிகார சபையின் பணியாகும்.

(2) மேல் மாகாணத்தினுள் கழிவுப்பொருள் முகாமைத்துவ திறமுறைகள் செயற்படுத்துதல் மற்றும் அதற்குத் தேவையான வசதிகள் உள்ளூராட்சி நிறுவனத்திற்கு பெற்றுக்கொடுத்தல் தொடர்பாக ஏற்க வேண்டிய மொத்தச் செலவுகளுக்காக மற்றும் ஒவ்வொரு உள்ளூராட்சி நிறுவன அதிகாரப் பிரதேசம் மிகவும் தூய்மையான உறையுளுக்கு ஒவ்வும் சுற்றாடலொன்று நடாத்திச் செல்லுதல் தொடர்பாக நிச்சயிக்கப்பட்ட வளாகங்களுக்காக இந்த நியதிச் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட சட்டவிதி மூலம் தீர்மானிக்கப்பட்ட மூலப்பிரமாணங்களுக்கு பொருத்தமான மற்றும் மதிப்பீடுகளின் கீழான கட்டணமொன்று மேல் மாகாண கழிவுப்பொருள் முகாமைத்துவ அதிகார சபை மூலம் அறவிடப்பட முடியுமானதோடு அவ்வாறு அறவிடப்படும் நிதி மேல் மாகாண கழிவுப் பொருள் முகாமைத்துவ அதிகார சபை மூலம் இந்தப் பிரிவின் கீழான குறிக்கோளுக்காக அதிகார சபையின் நிதியத்திற்கு சேர்க்கப்பட வேண்டும்.

*சட்ட விதி உருவாக்கும் அதிகாரம்*

5. (1) இந்த நியதிச் சட்டத்தின் நோக்கத்திற்காக செயற்படுதல் தொடர்பாக மற்றும் அதிகாரம் செயற்படுதல் தொடர்பாக சட்டவிதி உருவாக்க வேண்டும் என்று இந்த நியதிச் சட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ள சகல விடயங்களும் செயற்படுத்துதல் தொடர்பாக அமைச்சர் மூலம் சட்டவிதி உருவாக்க முடியும்.

(2) அமைச்சர் அவர்களால் உருவாக்கப்பட்ட சகல சட்டவிதிகளும் வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிக் கப்படுவதோடு அது பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து அல்லது வர்த்தமானிப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்ட முன்னுள்ள திகதியிலிருந்து செயற்பட வேண்டும்.

(3) அமைச்சர் மூலம் தயாரிக்கப்பட்ட சட்டவிதி வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதன் பின்பு கூடியவிரைவில் அனுமதி தொடர்பாக மாகாண சபைக்கு சமர்ப்பிக்க வேண்டும். மாகாண சபை அந்த சட்ட விதியை அங்கீகரித்து அந்த அங்கீகாரம் தொடர்பாக வர்த்தமானிப் பத்திரிகை மூலம் அறிவித்தல் வேண்டும்.

அந்த முறையில் அங்கீகரிக்கப்படாவிட்டால் அதை வர்த்தமானிப் பத்திரிகை மூலம் அறிவித்தல் செய்யப் படுவதோடு அன்று தொடக்கம் அந்த சட்டவிதியின் கீழ் இது வரைக்கும் எடுக்கப்பட்ட செயன்முறைகளுக்கு பங்கம் இல்லாமல் இரத்துச் செய்யப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

பொருள் கோடல்

6. சொல் தொடர்பாக வேறுபொருள்கோடல் தேவைப்பட்டாலொழிய, இந்த நியதிச் சட்டத்தில்

"அமைச்சர்" என்பது மேல் மாகாணத்தின் உள்ளூராட்சி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சராகவும்,

"அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்" என்பது மேல் மாகாண கழிவுப் பொருள் முகாமைத்துவ அதிகார சபையின் பணிப்பாளர் மூலம் அதிகாரத்தை ஒப்படைக்கப்பட்ட, எந்தவொரு உத்தியோகத்தர் அல்லது உள்ளூராட்சி நிறுவனத்தின் நிறைவேற்று தலைவர் மூலம் அது தொடர்பாக நிச்சயிக்கப்பட்ட அதிகாரம் ஒப்படைக்கப்பட்ட உத்தியோகத்தர்.

"உள்ளூராட்சி நிறுவனம்" என்பது எந்தவொரு பிரதேச சபையும், நகர சபையும், மாநகர சபையும் அல்லது அது தொடர்பாக அதிகாரங்கள் நடைமுறைப்படுத்துகின்ற எந்தவொரு அதிகார சபையும்

"பொலிஸ் உத்தியோகத்தர்" என்பது உப பொலிஸ் பரிசோதகர் அல்லது அதற்கு மேலான பதவியை வகிக்கும் பொலிஸ் சேவையின் உத்தியோகத்தரொருவர்.

"வாகனம்" என்பது மோட்டார் வாகன கட்டளைச் சட்டத்தில் உள்ள பொருளாகும்.

"கழிவுப் பொருள்" என்பது, மனிதனின் வாழ்தலுக்கு மற்றும் உடல் நலத்திற்கு இடைஞ்சல், அச்சுறுத்தல் பாதிப்பு மற்றும் தொல்லை தருகின்ற அல்லது காலத்துடன் அவ்வாறு ஏற்படுவதற்கு இடமுள்ள, அகற்றப்படும் பொருள், அளவில் பெரியதான அகற்றப்படும் பொருள், சாம்பல், சிதைவுகள், சேறு, அகற்றப்படும் எண்ணெய், மிருக மற்றும் மனித மலவகை அகற்றப்படும் அமில மற்றும் கொழுப்பு வகைகள், இறந்த மிருக உடல் ஆகிய முக்கியமற்ற மிகுதியானவை மற்றும் நகர்சார்ந்த கழிவுப்பொருள் இங்கு உட்படுத்தப்படும்.

"வீதியொன்று" என்பது சாலை, பொது வீதி, இரண்டு தரப்பினர் அல்லது அதற்கு மேல் உட்பிரவேசிக்கும் உரிமைகள் உள்ள தனியார் வீதி, எந்தவொரு சாலைக்குரிய, வீதிக்குரிய கான், புகையிரத வீதியொன்று, சுரங்கப்பாதை, கால்வாய், ஓடை, கங்கையொன்று.

"வள்ளம்" என்பது நீரின் மேல் இயந்திரம் அல்லது இயந்திரமற்ற முறையில் நீரின் மேல் செலுத்தக்கூடிய எந்தவொரு கருவியென பொருள்படும்.

ஒவ்வாமை ஏற்படும் போது சிங்கள மொழிச் சொல் அதிகாரமுடையதாகும்.

7. நியதிச்சட்டத்தின் சிங்களம் அல்லது தமிழ் மொழிச் சொல்லுக்கு இடையில் இணக்கப்பாடு இன்மை ஏற்பட்டால் அதற்கு சிங்கள மொழிச் சொல் அதிகாரமுடையதாகும்.

5 - 468

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.